(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 34.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 திசெம்பர் 11, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

64/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் கமநல சேவை ஆளுகைப் பிரதேச மட்டத்தில் வயற் காணிகளை மீட்டல் தொடர்பாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை கமநல சேவை ஆளுகைப் பிரதேசங்களின் படி வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி முறைப்பாடுகளின் பிரதிவாதிகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அந்தஸ்து ஆகியவை யாவை;

(iii) இவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின் இந்நடவடிக்கைகள் ஒவ்வொரு ஆளின் படி வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சட்டபூர்வமாக அனுமதியைப் பெற்று வயல் காணிகளை மீட்டவர்கள் மாத்தறை மாவட்டத்தில் உள்ளனரா;

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவை யாவை;

(iii) காணி மீட்புக்கு இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட காரணங்கள் யாவை;

(iv) இவர்கள் ஒவ்வொருவருக்கும் அனுமதி வழங்கிய உத்தியோகத்தர்கள் வெவ்வேறாக யாவர்;

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) காணி மீட்டல் தொடர்பாக வழக்குத் தொடரப்பட்ட (ஆ) (iv) இல் குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு நீதிமன்றத்தினால் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட தீர்ப்பு வெவ்வேறாக யாவை;

(ii) குறிப்பிட்ட தீர்ப்பின் படி செயற்பட்ட ஆட்கள் யாவர்;

(iii) குறிப்பிட்ட தீர்ப்பின் படி இதுவரை செயற்படாத ஆட்கள் யாவர்;

(iv) தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்த ஆட்கள் யாவர்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

185/ ’15

2\.

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(ஆ) (i) 2015.10.30 ஆந் திகதியளவில் சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைகள் வாரியாகவும்;

(ii) சிறைச்சாலைகளின் மொத்த எண்ணிக்கை சிறைத் தண்டனை அனுபவிக்கும் தவறின் தன்மைக்கமையவும்;

(iii) முதலாவது தடவையாக, இரண்டாவது தடவையாக, மூன்றாவது தடவையாக அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அந்தந்த தடவைகளுக்கு அமையவும்;

வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) ஒரு சிறைக் கைதிக்காக மாதாந்தம் அரசு ஏற்கும் செலவு எவ்வளவு என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இந்த சிறைக் கைதிகளுக்கிடையே உள்ள,

(i) ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை;

(ii) 17 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் எண்ணிக்கை;

(iii) 17 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைக்கப்பட்ட இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் எண்ணிக்கை;

(iv) 75 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை;

சிறைச்சாலைகளுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) தாய்மார்கள் சிறையிடப்படுவதன் காரணத்தினால் சிறைச்சாலைகளில் வாழும் பிள்ளைகள் இருப்பின் அந்த எண்ணிக்கையும் ;

(ii) சிறையிலிடப்பட்டுள்ள மதகுருமார்களின் எண்ணிக்கை மதங்களுக்கமையவும்;

சிறைச்சாலைகளுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

189/ ’15

3\.

கௌரவ (டாக்டர் ) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, கொம்பனித்தெருவில் அமைந்துள்ள பாதுகாப்புச் சேவைப் பாடசாலை சார்பில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கல்வி அமைச்சு வருடாந்தம் செலவிட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) இப்பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் சேகரிப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதா;

(iii) ஆமெனில், அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா;

(iv) மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்தை வைப்புச்செய்துள்ள வங்கிக்கணக்கு யாது;

(v) இங்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கொன்று பேணப்பட்டு வருகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

204/ ' 15

4.

கௌரவ எம். எச். எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாணத்தின் கண்டி, தெல்தொட்ட, முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு (நவோத்யா பாடசாலை) புதிய இரண்டு மாடிக் கட்டடமொன்றை நிர்மாணிக்க வேண்டியதன் அவசியத்தைக் கவனத்திற்கொண்டு சனாதிபதி செயலாளரின் பணிப்புரையின் பிரகாரம் மத்திய மாகாண கல்வி மற்றும் முதலமைச்சரின் செயலாளரது CPC/CMC/3/1/1 இலக்கமும் 2012.10.24 திகதியும் கொண்ட கடிதம் மூலமாக கண்டி வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட்டதென்பதையும்;

(ii) அதற்கிணங்க 2012.11.12 ஆந் திகதி வலயக் கல்விப் பணிப்பாளர் களப் பரிசோதனையை மேற்கொண்டு அங்கு கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வகுப்புக்களின் எண்ணிக்கைக்கிணங்க இடவசதி போதாதென்பதால் புதிய இரண்டு மாடிக் கட்டடமொன்றைப் பெற்றுக்கொடுப்பது பொருத்தமானதென பரிந்துரைத்துள்ளாரென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த வித்தியாலயத்திற்காக புதிய இரண்டு மாடிக் கட்டடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

241/ '15

5.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு சொந்தமான மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்களின் இறக்குமதிச் சாத்தியவளம் (மாதங்களில்) ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) வியாபாரப் பண்டங்கள் தொடர்பில் கணிப்பிடப்பட்ட மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்களின் இறக்குமதிச் சாத்தியவளம், வியாபாரப் பண்டங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் சீராக்கல் செய்யுமிடத்து, ஒவ்வொரு வருடத்துக்கமைய மாறுபடும் விதம் யாதென்பதையும்;

(iii) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் இறக்குமதிச் சாத்தியவளத்தின் பெறுமதி ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களினுள் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்களின் இறக்குமதிச் சாத்தியவளம் எவ்வாறு இருந்ததென்பதையும்;

(v) மேற்படி நிலைமையில் தாக்கத்தை எற்படுத்திய காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

கௌரவ புத்திக பத்திறண,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒலுவில் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு செலவுசெய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) இப்பணத்தொகை பெறப்பட்ட மூலங்கள் யாவை;

(iii) மேற்படி மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன் மற்றும் உதவித் தொகைகள் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) குறிப்பிட்ட கடன் மற்றும் உதவிகளுக்கான தவணைப்பணம் மற்றும் வட்டியாக வருடாந்தம் செலுத்தவேண்டிய பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒலுவில் துறைமுகம் 2013.09.01 ஆம் திகதி மக்களுடைமையாக்கப்பட்ட பின்னர் முதல் வருடத்தில் துறைமுகத்தின் வருமானம் எவ்வளவு;

(ii) இதன் வருமானத் தலைப்புக்கள் யாவை; இந்த ஒவ்வொரு தலைப்பின் படியான வருமானம் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) ஒலுவில் துறைமுகம் மக்களுடைமையாக்கப்பட்ட பின்னர் முதல் வருடத்தில் துறைமுகத்துக்கு செலவுசெய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(iv) இதன் செலவுத் தலைப்புக்கள் யாவை; இந்த ஒவ்வொரு தலைப்பினதும் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தரவுகளின் படி 2013.09.01 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை ஒலுவில் துறைமுகம் பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு;

(ii) இலாபத்தை அல்லது நட்டத்தை முகாமை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்),— (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்),— 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

கௌரவ அலி ஸாஹிர் மௌலானா செயிட்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"காசிமி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

4.

கௌரவ அலி ஸாஹிர் மௌலானா செயிட்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"செய்யது சேஹு கோயா தங்கள் மௌலானா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ ஜயந்த சமரவீர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சத்மெத்சித்ஹவுல சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

6.

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 4),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஜயந்திபுர நலன்புரிச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

7.

கௌரவ மயந்த திசாநாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 5),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

8.

கௌரவ மயந்த திசாநாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 6),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) — (ஒதுக்கப்பட்ட பதினேழாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 10).

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் கட்டார் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2012 மே 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தாய்லாந்து இராச்சிய அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜனவரி 03 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தோனேஷியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜூன் 10 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 4),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் எகிப்து அராபியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 மாச்சு 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 5),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைத் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 நவெம்பர் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 6),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் வியட்நாம் சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 ஒற்றோபர் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 7),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சீன மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1986 மாச்சு 13 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 8),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் மலேசியா அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1982 ஏப்பிரல் 16 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 9),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜனவரி மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 10),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஈரான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜூலை 25 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 11),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2011 மாச்சு 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 12),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1997 ஜனவரி 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினது சிபாரிசின் பேரில் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015.06.08 ஆம் திகதிய 1918/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மே மாதம் 18 ஆம் திகதிய 1915/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.11.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்திவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்துக்குக் காலம் திருத்திப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(975, 976 மற்றும் 977 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1933/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 13(1) (ஈ) என்னும் பிரிவுடனும் 16 பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மார்ச்சு மாதம் 25 ஆம் திகதிய 1907/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2014 ஏப்பிறல் 03 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சிங்கப்பூர் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்டதும், 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

---